DEPOSITION OF WITNESS
CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 17 /2019

Deposition of Witness : DW2

| | | | |
|---|---|---|---|
| Name | : கார்த்தீஸ்வரன் | Father's/Husband's Name : | பெருமாள் |
| Village | : வருசநாடு | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 31.10.2025

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

**1)** தாவா சொத்தின் சர்வே எண்.546, அதன் விஸ்தீணரம் 3/4 செண்ட் ஆகும். வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தாவா சொத்தின் சுவாதீனம் வேண்டுமென்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். 1ம் பிரதிவாதி எனது தகப்பனார் என்றால் சரிதான். 07.06.1999 ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தின்படி 1ம் பிரதிவாதிக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 26.05.2010 ம் தேதி மாரீஸ்வரி என்பவருக்கும் 1ம் பிரதிவாதி தாவா சொத்தை கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். 04.06.2010 ம்தேதி மாரீஸ்வரி 1ம் பிரதிவாதி பெயருக்கு ஒரு பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் தான் 1ம் பிரதிவாதி வாதியின் பெயருக்கு கடந்த 14.08.2015 ம் தேதி கிரையம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

2) அதன் பிறகு கடந்த 17.10.2015 ம் தேதி வாதி என் மீதும் எனது தாயார் 2ம் பிரதிவாதி மீதும் வருசநாடு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி புகாரின் பேரில் காவல்நிலையத்தில் ஆஜராகி விசாரணையின் போது தாவா சொத்து சம்பந்தமாக நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்கிறோம் என்று சொல்லி வந்துவிட்டோம். 05.07.2006 ம் தேதி தாவா சொத்தை பொறுத்து எனக்கு 1ம் பிரதிவாதி தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை 1ம் பிரதிவாதியை அவர் ஆயுள்வரை பராமரித்துக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் தான் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் 1ம் பிரதிவாதியும் நானும் தாவா சொத்தின் கூட்டு அனுபவத்தில் இருப்பது என்றும் மேலும் 1ம்

பிரதிவாதியின் இறப்பிற்கு பிறகு எனக்கு தாவா சொத்து கிடைப்பது என்றும் நிபந்தனை உள்ளது என்றால் சரிதான்.

3) மேற்படி நிபந்தனையின் படி நடந்துகொள்ளாததால் தான் 1ம் பிரதிவாதி எனக்கு எழுதி கொடுத்த தானசெட்டில்மெண்ட பத்திரத்தை கடந்த 15.04.2008ம் தேதி ரத்து செய்துவிட்டார் என்றால் ரத்து செய்யப்பட்ட விபரம் 2010ம் ஆண்டு தான் எனக்கு தெரியும். 2010ம் ஆண்டு மேற்படி விபரம் எனக்கு தெரிந்த பிறகு என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் மாரீஸ்வரி என் மீது வழக்கு தாக்கல் செய்த போது தான் இந்த விபரம் எனக்கு தெரியவந்தது. அசல் வழக்கு எண்.59/2012 என்ற வழக்கை மாரீஸ்வரி என்பவர் என் மீது தாக்கல் செய்தார் என்றால் சரிதான், மேற்படி வழக்கை 1ம் பிரதிவாதிதான் தாக்கல் செய்தார், அந்த வழக்கிற்கும் அவருக்கும் சம்பந்தம் இல்லை என்று மாரீஸ்வரி சொல்லிவிட்டார். மேற்படி வழக்கில் நான் ஆஜராகி பின்னிட்டு தாவா சொத்தில் எந்த இடைஞ்சலும் செய்யாததால் மேற்படி வழக்கு மேல்நடத்தப்படாமல் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல, அவருக்கு அந்த வழக்கு நடத்துவதில் விருப்பம் இல்லை, அதனால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது.

4) அதன்பிறகாவது 1ம் பிரதிவாதி மாரீஸ்வரிக்கு எழுதி கொடுத்த ஆவணம் மற்றும் 1ம் பிரதிவாதி எழுதி பதிவு செய்துள்ள தான செட்டில்மெண்ட் ரத்து பத்திரம் செல்லாது என்று எதுவும் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. மாரீஸ்வரி சொத்தை என்னிடம் விட்டு சென்று விட்டதால் நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வது போல் மாரீஸ்வரி தாவா சொத்தை என்னிடம் கொடுக்கவில்லை என்றாலும் 2015ம் ஆண்டு வாதிக்கு கிரையம் கொடுக்கும் வரை 1ம் பிரதிவாதி தான் தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. எனது தாயார் 2ம் பிரதிவாதி MC.No.6/2012 என்ற வழக்கை 1ம் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்து அந்த வழக்கு 1ம் பிரதிவாதிக்கும், மாரீஸ்வரிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் மாதம் ரூ.2000/– ஜீவனாம்சம் வழங்க உத்தரவு ஏற்பட்டது.

5) அசல் வழக்கு எண்.59/2012 என்ற வழக்கு நிலுவையில் இருக்கும்போதே மாரீஸ்வரி எழுதி கொடுத்ததாக 1ம் பிரதிவாதி வாதிக்கு கிரைய பத்திரம் மோசடியாக எழுதி கொடுத்துவிட்டார் என்று பொய்யாக எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மாரீஸ்வரி கொடுத்த பவர் பத்திரத்தின் அடிப்படையில் 1ம்பிரதிவாதி சட்டப்படியான அதிகாரத்துடன் வாதிக்கு

கிரையம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 2012ம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எத்தனை ஆண்டுகள் 1, 2 பிரதிவாதிகளும் பிரிந்து வாழ்ந்தார்கள் என்று கேட்டால் 1ம் பிரதிவாதி வெளியூருக்கு வேலைக்கு செல்வதாக சென்றுவிடுவார், மற்ற நேரத்தில் சேர்ந்து தான் வாழ்ந்தார்கள். 1ம் பிரதிவாதியை நானும் எனது தாயாரும் சரியாக பராமரிக்காத காரணத்தாலும், வயதான காலத்தில் தனக்கு பணம் தேவைப்படும் என்பதால் தான் தாவா சொத்தை கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல.

6) பி.வா.சா.ஆ.2 முதல் 4 வரையான ஆவணங்கள் 1ம் பிரதிவாதி எனக்கு எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்த பிறகு மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எந்த ஆவணத்தின் அடிப்படையில் எனக்கு பட்டா வழங்கினார்கள் என்று வருவாய் துறை அதிகாரிகளால் விசாரிக்க தயாராக இருக்கிறேனா என்றால் தயாராக தான் இருக்கிறேன். வாதி சட்டப்படியான உரிமையாளரிடம் கிரையம் வாங்கியுள்ளதால் அவர் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் மற்றும் சுவாதீன மீட்பு பரிகாரம் அவருக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. வாதி கிரையம் வாங்கிய பிறகு தான் 1ம் பிரதிவாதியை தாவா சொத்திலிருந்து வெளியேற்றிவிட்டு நானும் 2ம் பிரதிவாதியும் சட்டவிரோதமாக அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 31.10.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN
Digitally signed by E SUGANTHAN
Date: 2025.10.31 17:15:21 +0530

District Munsif,
Aundipatti.